# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில்
## 02.01.2009 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஸஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

முஹர்ரம் மாதத்தை இப்போது நாம் கடந்து கொண்டிருக்கிறோம். இன்று முஹர்ரமின் 4 ஆம் தேதியாகும். மேலும் ஜனவரி 2009 -ன் 2 ஆம் தேதியாகும். இன்று கமரி (சந்திர) வருடத்தின் முதல் ஜுமுஆவாகும். மேலும் கிறித்தவ அல்லது சூரிய வருடத்தின் முதல் ஜுமுஆவாகும். இவ்விரண்டு அமைப்பு காலண்டரின் இந்த முதல் ஜுமுஆவை அல்லாஹ் ஜமாஅத்தே அஹ்மதிய்யாவிற்கு அருளுக்குரியதாக ஆக்குவானாக! இது தொடர்பாக நான் ஜமாஅத்திற்கு துஆவின் பக்கம் கவனமூட்ட விரும்புகிறேன்.

ஜுமுஆ தினத்திற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களோடு குறிப்பான தொடர்பு இருக்கிறது என்பதை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களும் தங்களது நூல்களில் எழுதியுள்ளார்கள். நானும் எனது குத்பாக்களில் பலமுறை கூறியுள்ளேன். இக்காலகட்டத்தில் பௌதீக மோகத்தின் காரணமாக குறிப்பாக முஸ்லிம்களுக்கு ஜுமுஆவின் மீது கவனம் குறைந்துள்ளது. எனவே, அல்லாஹ் சூரா ஜுமுஆவில் ஜுமுஆவின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளான். நீங்கள் உலகியல் பிரச்சனையில் மூழ்கி விடாதீர்கள். அனைத்து அருள்களின் ஊற்று அல்லாஹ்வே ஆவான் என்பது எப்போதும் உங்கள் மனதில் இருக்க வேண்டும். எனவே, ஜுமுஆ தொழுகையின் பக்கமும் உங்களுக்கு கவனம் இருக்க வேண்டும். ஜுமுஆ தொழுகைகளை நிறைவேற்றி விட்ட பிறகு உலக வேலைகளில் ஈடுபடுங்கள். அல்லாஹ்வின் அருளைத் தேடுங்கள்.

இந்த அதிகாரத்தின் துவக்கத்தில் ஆகரீன்களில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகை தொடர்பாகவும் நற்செய்தி கூறப்பட்டுள்ளது. இந்த மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வருகையின் நோக்கத்தை நிறைவேற்றியவாறு அன்னாரின் பணியை முழுமைப்படுத்தி, திருக்குர்ஆனின் போதனையை பரப்ப வேண்டும். மேலும் உள்ளங்களை தூய்மையாக்க வேண்டும். மேலும் ஞானத்தை கற்பிக்க வேண்டும். இதன் மூலம் உலகம் தனது இறைவனை அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். மேலும் முஸ்லிம்களும் ஒரே உம்மத்தாக ஆக வேண்டும். மேலும் பிறகு சமுதாயத்தின் நல்லுள்ளம் கொண்டவர்களும் ஒரே கரத்தின் கீழ் ஒன்றுபட்டு இறைவனின் விருப்பத்தை பெறுபவர்களாக வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை விளக்கியவாறு கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வருகையின் நோக்கம் **தக்மிலே தீன்** (மார்க்கத்தை முழுமைப்படுத்துவது). இந்த முழுமைப்படுத்துதலில் இரண்டு சிறப்புகள் உண்டு. ஒன்று **தக்மீலே ஹிதாயத்** (நேர்வழியை முழுமைப்படுத்துவது), இரண்டு **தக்மிலே இஷாஅத்தே ஹிதாயத்** (நேர்வழியைப் பரப்புவதில் முழுமைப்படுத்துவது). நேர்வழியை முழுமைப்படுத்தும் காலகட்டம் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முதல் காலகட்டமாகும். நேர்வழியைப் பரப்புவதில் முழுமை பெறுவது **வ ஆகரீன மின்ஹும் லம்மா எல்ஹகூபிஹிம்** என்று கூறப்பட்டது அன்னாரின் இரண்டாவது காலகட்டமாகும். மேலும் அது இந்த காலகட்டமாகும்.

எனவே அல்லாஹ் இரண்டு முழுமைப்படுத்துதலையும் இணைத்துள்ளான். இந்த இணைப்பு மிகவும் மகத்துவமிக்க இணைப்பு ஆகும்.

**தக்மீலே ஹிதாயத்** – நேர்வழி முழுமை பெறுதல் என்பதன் பொருள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது அல்லாஹ்வின் ஆன்மீக மற்றும் பௌதீக அருட்கொடைகள் அனைத்தும் முழுமையாக இறங்கி விட்டது. மேலும் இந்த முழுமையான மார்க்கத்திற்கு பிறகு வேறு புதிய மார்க்கமோ அல்லது புதிய ஷரீஅத்தோ

தேவையில்லை. பௌதீக அருட்கொடைகள் முழுமையாக இறங்கவில்லை என்று எவரேனும் கூறலாம். ஒவ்வொரு நாளும் புதிய புதிய கண்டுபிடிப்புகள் நடந்து கொண்டிருக்கிறது. ஒரு விஷயத்தை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களே மனிதகுலம் முழுவதுக்குமாக அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட தலைசிறந்த தூதர் ஆவார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்குத்தான் கியாமத் நாள் வரையிலான காலகட்டம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அன்னாரின் மீதுதான் முழுமையான வேதநூலாகிய திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது. இது பழைய வரலாறு மற்றும் புதிய சட்டதிட்டங்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்கிறது. மேலும் பௌதீக ரீதியிலான புதிய கண்டுபிடிப்புகள் தொடர்பாகவும் திருக்குர்ஆன் முன்கூட்டியே அறிவிக்கவும் செய்கிறது. புதிய கண்டுபிடிப்புகள் நடக்கும்போதெல்லாம் திருக்குர்ஆன் அதை மெய்ப்பித்துக் கொண்டே இருக்கிறது. முஸ்லிம் விஞ்ஞானிகள் திருக்குர்ஆனின் முன்னறிவிப்புகள் தொடர்பாக அவர்கள் Research செய்தால் அல்லது திருக்குர்ஆனில் புதைந்து கிடக்கின்ற எண்ணற்ற ஞானங்களின் அடிப்படையில் ஆராய்ந்தால் பல புதிய கண்டுபிடிப்புகளுக்கு திருக்குர்ஆனிலிருந்து வழிகாட்டல் கிடைக்கும். Professor Dr. அப்துஸ் ஸலாம் சாஹிப் அவர்களும் கூட தங்களது ஆய்வை திருக்குர்ஆனின் அடிப்படையில்தான் செய்தார்கள். அவர்களின் சிந்தனையின் அடிப்படையில் திருக்குர்ஆனில் ஏறக்குறைய 700 வசனங்கள் விஞ்ஞானம் தொடர்பானவையாகும். அல்லது இந்த வசனங்களில் அறிவியல் தொடர்பாக வழிகாட்டல் கிடைக்கிறது. இது அவர்களின் சிந்தனையாகும். அஹ்மதி முஸ்லிம் விஞ்ஞானி இந்த எல்லையில்லா கடலில் மூழ்கி அறிவியல் தொடர்பான முத்துக்களை திருக்குர்ஆனிலிருந்து எடுக்கலாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**தக்மீலே ஹிதாயத்** - நேர்வழி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் முழுமை அடைந்து விட்டது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களால் கொண்டு வரப்பட்ட போதனையின் மூலம் முழுமை பெறாத எந்த மார்க்க, ஆன்மீக மற்றும் விஞ்ஞான விஷயம் ஏதுமில்லை. ஆனால், அந்த காலகட்டத்தில் சில விஷயம் வெளிப்படாமல் மறைவாக இருந்தன. ஆனால், மஸீஹ் மவ்வூதின் காலகட்டத்தில் இந்த மறைவான விஷயங்கள் எல்லாம் வெளிப்பட்டு **தக்மீலே இஷாஅத்தே ஹிதாயத்** - நேர்வழியைப் பரப்புவதில் முழுமை பெறுவதற்கு காரணிகளாக அமைகின்றன. எனவே, அல்லாஹ்வின் அருளால் மனிதனுக்கு பயன்படுகின்ற இந்த பொருட்கள் எல்லாம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களால் கொண்டு வரப்பட்ட மார்க்கத்தை பரப்புவதற்கு பயன்படுகின்றன.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்களது நூல்களில் அச்சகம் மற்றும் பல உதாரணங்களைக் கூறியுள்ளார்கள். இன்று நாம் செயற்கைக்கோள் மற்றும் பலவற்றை காண்கின்றோம். ஆக, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசர், மஸீஹ் மற்றும் மஹ்தியின் காலகட்டத்தில் வெளிப்படுகின்ற விஷயங்கள் அவைகளின் உதவியோடு மார்க்கம் பரப்பப்படுகிறது. திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனைகள், அன்னாரின் உயர் தகுதியின் முழுமைப்பாடு வெளிப்படுகிறது. இது ஒரு மூஃமினின் ஈமானை வலுப்படுத்துகிறது. மேலும், இது நமக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதன் பக்கம் கவனமூட்டப்படுகிறது. **அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வபாரிக் வஸல்லிம் இன்னக்க ஹமீது[ன்]ம் மஜீத்**

இது நான் ஏற்கனவே கூறியது போன்று ஹிஜ்ரி வருடத்தின் முதல் ஜுமுஆவாகும். அவ்வாறே ஆங்கில வருடத்தின் முதல் ஜுமுஆவும் ஆகும். அல்லது சந்திர வருடத்தின் முதல் ஜுமுஆவாகும். அவ்வாறே சூரிய வருடத்திற்கும் இது முதல் ஜுமுஆவாகும். ஜுமுஆவோடு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் காலகட்டத்திற்கு மிக நெருங்கிய தொடர்பு உண்டு.

உலகியல் மற்றும் இஸ்லாமிய வருடப் பிறப்பில் இவ்வாறு ஜுமுஆ ஒன்றுபடுவது நம்மை துஆவின் பக்கம் கவனமூட்டுவதாக இருக்க வேண்டும். சந்திரன் மற்றும் சூரியன் இவ்விரண்டு அமைப்புமே இறைவனால் உருவாக்கப்பட்டவையாகும். நான் உலகியல் மற்றும் இஸ்லாமிய ஆண்டு என்று கூறினேன். இதற்குக்

காரணம் பொதுவாக கிரிகோரியன் காலண்டர் (ஆங்கில வருடம்) ஜுலியஸ் ஸீஸரின் காலத்திலிருந்தே தொடர்ந்து வருகிறது. ஹிஜ்ரி அல்லது கமரி என்பது இஸ்லாமிய முறைப்படி கூறப்படுகிறது. இல்லையென்றால் **ஷம்ஷி**, கமரி இரண்டும் அல்லாஹ்வால் உருவாக்கப்பட்ட அமைப்புகளே ஆகும். இந்த இரண்டு வருடங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்குப் பிறகு அன்னாரின் கிலாஃபத்தின் இரண்டாவது நூற்றாண்டில் முதன் முறையாக இணைகிறது. நாம் நமது கவனத்தை துஆவின் பக்கம் வைத்தால், நமது செயல்களை அல்லாஹ் மற்றும் அவனது ரஸூலுடைய கட்டளையின்படி அமைத்தால் ஆன்மீக மற்றும் பௌதீக முன்னேற்றங்கள் யாவும் இப்போது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் உண்மை நேசருடைய கிலாஃபத்தோடு இணைந்துள்ள ஜமாஅத் மூலம் உலகிற்கு புதிய மகத்துவத்தோடு தென்படும் – இன்ஷா அல்லாஹ்.

சூரியன் மற்றும் சந்திரனின் வருடம் ஒரு அருளுக்குரிய நாளில் இணைவது முஹம்மதின் மஸீஹின் இணைப்பு அடையாளங்களுள் ஓர் அடையாளமாகும். இந்த இரண்டு நாளும் பலமுறை இவ்வாறு இணைந்து வந்திருக்கலாம். ஆனால் இந்த ரீதியில் இணைவது இதுவே முதன்முறையாகும். இன்ஷா அல்லாஹ் இது, ஜமாஅத்தே அஹ்மதிய்யாவை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் ஒரு மைல் கல் ஆகும்.

இன்று உலகம் கேளிக்கையிலும் விளையாட்டிலும் மூழ்கி உள்ளது. கேளிக்கை என்னும் அசுத்த நீரில் மூழ்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் ஒவ்வொரு அஹ்மதியும், ஒவ்வொரு நாட்டின் ஒவ்வொரு ஜமாஅத்தும் தமது பொறுப்பை புரிந்து கொண்டவாறு திருக்குர்ஆனின் போதனையை தானும் புரிந்து கொண்டு சக மனித இனத்தவருக்க புரிய வைக்க முன்பை விட அதிகமாக முயற்சி செய்ய வேண்டும். அசுத்தத்தில் மூழ்குபவர்களை தூய நீரால் குளிப்பாட்டி சுத்தம் செய்து நாம் **கைரே உம்மத்** – தலைசிறந்த சமுதாயம் என்பதை நிரூபிக்க வேண்டும்.

இன்று இது அஹ்மதியின் மாபெரும் பொறுப்பாகும். இன்று நாம் இந்த பொறுப்பை உண்மையில் நிலைநாட்டவில்லை என்றால் நாம் தலைசிறந்த உம்மத் என்று கூறிக்கொள்ள முடியாது. மேலும் முஹம்மதிய மஸீஹின் சீடர்கள் என்றும் கூறிக்கொள்ள முடியாது. அந்த சீடர்கள் **நஹ்னு அன்ஸாருல்லாஹ்** – நாங்கள் அல்லாஹ்வின் உதவியாளர்கள் ஆவோம் என்று முழக்கம் இட்டனர். இவ்வாறு முழக்கமிட்டு எல்லா வகையான உதவியும் செய்வோம் என்று உறுதி எடுத்தனர்.

அல்லாஹ் வெளிப்படுத்துகின்ற அடையாளங்களை உலகவாதிகள் தற்செயலாக நடந்தவை என்று கூறுவர். ஆனால் பார்க்கின்ற கண்கள் இருந்தால் சில தற்செயலாக நிகழ்பவை கூட அல்லாஹ்வின் உதவியை மறைமுகமாக அடையாளம் காட்டுபவை ஆகும். இவ்வாறு அடையாளம் காட்டுவதன் மூலம் அல்லாஹ்வின் உதவி நிச்சயமாக மிக அருகில் உள்ளது என்பதை அல்லாஹ் அறிவிக்கிறான். மேலும் வெற்றிகள் உங்கள் காலடியை முத்தமிடப்போகின்றன. அல்லாஹ் சோதனைகளை மட்டும் கொடுப்பதில்லை. மாறாக, ஒவ்வொரு சோதனையின்போதும் தனது அருள் மற்றும் கருணையின் கதவுகளை முன்பைவிட அதிகமாக திறக்கின்றான். ஒவ்வொரு சோதனை மற்றும் கடினத்தின் போதும் பொறுமையோடு இருந்தவாறு அவன் முன்னிலையில் நாம் குனிய வேண்டும். இதுவே நிபந்தனையாகும். அவனது கட்டளைகளை முன்பை விட அதிகமாக பேணி வாருங்கள். இதன் மூலம் வெற்றியின் படிக்கட்டுகள் இன்னும் அருகாமையில் வரும்.

எனவே, இன்று முஹர்ரம் மற்றும் புத்தாண்டையொட்டி அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் தம்மில் ஒரு புத்துணர்ச்சியுடன், புதிய ஊக்கத்துடன் தூய மாற்றத்தை உருவாக்குங்கள். **அர்ஷ்** – அரியணையில் வீற்றிருக்கும் இறைவன் நேசிக்கும் அளவிற்கும் உங்களது செயல்பாட்டை அழகுபடுத்துங்கள். இதுவே எனது விண்ணப்பமாகும். வானங்கள் மற்றும் பூமியின் இறைவன் அழைப்பவரின் அழைப்பிற்கு பதில் கொடுக்கின்ற இறைவன் நமது துஆக்களை ஏற்றுக்கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கொடியை முழு உலகிலும் நாட்டுவதற்கும், ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தும் காட்சிகளை நமது வாழ்நாளிலேயே நமக்கு காட்டுவானாக!

துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் முஹர்ரம் தொடர்பாக நான் உங்களுக்கு கூற விரும்புகிறேன். இந்த மாதத்தில் ஸலவாத் ஓதுவதன் பக்கம் குறிப்பாக கவனம் செலுத்துங்கள். துஆக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக இந்த வழியை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் நமக்கு கற்றுத் தந்துள்ளார்கள். மேலும் அன்னாரின் உண்மை நேசர் தரூத் **ஷரீஃப்**பின் அருட்களை நமக்கு எடுத்துக்கூறி இதன் பக்கம் குறிப்பாக கவனமூட்டியுள்ளார்கள். ஸலவாத் ஓதுவதற்கு நம்மை நாமே அதற்கான தகுதியை ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அப்போதுதான் ஸலவாத் நமக்கு பலன் அளிக்கும். நாம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுகிறோம் என்றால் அன்னாருடைய தகுதியும் நமக்குப் புரிந்திருக்க வேண்டும்.

ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவம் தொடர்பாக வருகின்ற ஹதீஸ்கள் சிலவற்றை உங்கள் முன் வைக்கிறேன்.

**ஹஸ்ரத் அபூதல்ஹா அன்ஸாரி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காலைப் பொழுதில் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்தில் குறிப்பாக மகிழ்ச்சி காணப்பட்டது. யாரஸுலல்லாஹ்! தங்களின் முகத்தில் குறிப்பாக மகிழ்ச்சி காணப்படுகிறதே? என்று சஹாபாக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், ஆம். இன்று அல்லாஹ்வின் புறமிருந்து ஒரு வானவர் வந்து இவ்வாறு கூறினார். உமது உம்மத்தில் யார் ஒருவர் உம்மீது மிக நல்ல முறையில் ஒருமுறை ஸலவாத் ஓதுவாரோ அதற்குப் பதிலாக அல்லாஹ் அவர் பெயரில் 10 நன்மைகளை எழுதுவான். மேலும் அவரது 10 தீமைகளை மன்னித்து விடுவான். மேலும் அவரை 10 பதவிகள் உயர்த்துவான். மேலும் அவர் உமக்காக வேண்டிய அருளை அவருக்காகவும் வழங்குவான் என்று கூறினார்கள்.

இங்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முகத்தில் ஏற்பட்ட மகிழ்ச்சி அல்லாஹ் இந்த உம்மத்தின் மீது புரிந்துள்ள அருளின் காரணமாக இருந்தது. எனவே, நமது பணி இந்த அருளைப் பெறுவதற்காக முன்வருவதே ஆகும். தூய்மையான உள்ளத்தோடு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓத வேண்டும். நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு துஆ செய்யுங்கள். மேலும் நன்மைகள் செய்வதற்கான நல்வாய்ப்பும் வேண்டுங்கள். அல்லாஹ்வின் கருணையை ஈர்த்தவாறு உங்கள் இம்மையையும் மறுமையையும் சீர்திருத்திக் கொள்ளுங்கள்.

இன்னொரு அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். **ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

எவர் என் மீது ஸலவாத் ஓதுவாரோ அவருக்கு கியாமத் நாளன்று நான் சிபாரிசு செய்வேன்.

ஆக, ஒரு ஸலவாத் ஓதுபவருக்கு இந்த சிறந்த பதவி கிடைக்கிறது. அவரது பாவங்கள் மன்னிக்கப்படுகிறது; நன்மைகள் எழுதுப்படுகிறது. இது மட்டுமின்றி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். நான் அவருக்கு கியாமத் நாளன்று சிபாரிசு செய்வேன்.

ஆனால், இங்கு ஸலவாத் ஓதுபவருக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்வார்கள் என்றால், அந்த மனிதருடைய உள்ளத்தில் பிற முஸ்லிம்களுக்காக பொறாமையும், காழ்ப்புணர்ச்சியும் இருக்க முடியுமா? இவ்வாறான மனிதர்களுக்காக சிபாரிசு கிடைக்குமா? மேலும் நாம் **அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஆலி முஹம்மதின்** என்று கூறும்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தாருக்கு எதிராக நமது உள்ளத்தில் காழ்ப்புணர்ச்சி இருக்க முடியுமா? அன்னாரது சஹாபாக்களுக்கு எதிராக பொறாமையும் காழ்ப்புணர்ச்சியும் உள்ளத்தில் இருக்குமா? இந்த விஷயத்தை முஸ்லிம்கள் புரிந்து கொண்டால் பிறகு முஸ்லிம்களுக்கு இடையேயான பிளவு, கோபம், சண்டை சச்சரவுகள் எல்லாம் தாமாகவே அழிந்து விடும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சிபாரிசை

பெறுவதற்கும் நமது பதவியை உயர்த்துவதற்கும் ஸலவாத்தின் உரிமையை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு உரிமையைப் பேணுவதற்கு ஒருவருக்கொருவர் இருக்கின்ற பொறாமையை அழிக்க வேண்டும். ஏனென்றால், அனைவரும் உம்மத்தில் ஒருவர் ஆவர்.

வெறும் வாயினால் ஸலவாத் ஓதி உள்ளம் வெறுப்பால் நிறைந்திருந்தால் இவ்வாறான மனிதர்களுக்காகவா ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்வார்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உள்ளங்களை இணைப்பதற்காகவே வந்தார்கள். அன்னாரை ஏற்றுக் கொள்கின்றவர்களைப் பற்றி அல்லாஹ் ருஹமாவும் பைனஹூம் அதாவது அவர்கள் ஒருவருக்கொருவர் கருணையும், அன்பும் கொள்கின்றனர் என்று கூறுகிறான். ஆனால் இன்று முஸ்லிம்களின் நிலை இவ்வாறு இருக்கின்றதா? இது முஹர்ரம் மாதமாகும். ஒவ்வொரு வருடமும் ஷியாக்களின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று நாம் செய்திகளில் கேட்கின்றோம். இந்த இடத்தில் இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று நாம் செய்தி கேள்விப்படுகிறோம்.

பாகிஸ்தானில் மவ்லவிகள் அதாவது மார்க்க அறிவுடையவர்கள் என்று கூறப்படுபவர்கள், மேலும் பள்ளிவாசலின் மெம்பர்களில் நின்றுகொண்டு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சுன்னத்தை நிறைவேற்றியவாறு, அன்பு, நேசம் மற்றும் அமைதியின் தூதுச் செய்தியை கூறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுபவர்கள் பேராசையிலும் மன இச்சையிலும் மூழ்கியுள்ள இந்த மவ்லவிகள் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மெம்பரின்மேல் நின்று கொண்டு வெறுப்பின் செய்தியைப் பரப்புகின்றனர். அன்பின் தூதுச் செய்தியைக் கூறுவதற்குப் பதிலாக வெறுப்பின் தூதுவர்களாக உள்ளனர். இதன் காரணமாக அரசாங்கம் இந்த மவ்லவிகளின் மீது கட்டுப்பாடு விதிக்கிறது. இந்த இந்த இடத்திற்க இந்த மவ்லவி செல்வதற்குத் தடை என்று பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகிறது. இவர்கள் சென்று அந்த இடத்தில் மக்களின் உள்ளங்களில் வெறுப்பை விதைத்து விட்டு வராதிருப்பதற்காக அவ்வாறு செய்யப்படுகிறது.

இவர்கள் ஒருபுறம் திருக்குர்ஆன் மற்றும் சுன்னத்தை போதிக்கின்றார்கள். மறுபுறம் வெறுப்பை விதைக்கிறார்கள். மேலும் வெறுப்பின் சுவரை எழுப்புகிறார்கள். ஒவ்வொரு வருடமும் இது தொடர்ந்து நடக்கிறது. அரசாங்கமும் ஒவ்வொரு வருடமும் தடை விதித்து வருகிறது. கர்பலாவில் தற்கொலை தாக்குதல் நடக்கிறது. ஷியாக்கள், சுன்னிகள் மீது தாக்குதல் நடத்துகின்றார்கள். சுன்னிகள் ஷியாக்கள் மீது தாக்குதல் நடத்துகின்றார்கள். இதை தடுப்பதற்கும், நாட்டில் குழப்பம் ஏற்படாமல் இருப்பதற்கும் அரசாங்கம் உலமாக்களின் கமிட்டிகளை அமைக்கிறார்கள். முஹர்ரம் தினம் முடிந்து விட்டாலும், வெறுப்பு என்ற எரிமலைக் குழம்பு பிறகு வெடிக்கிறது. இதன் காரணமாக வருடம் முழுவதும் ஒருவருக்கு எதிராக மற்றவர் குழப்பம் செய்து கொண்டே இருக்கிறார். இவ்வாறு செய்கின்ற இரு பிரிவினருமே முஸ்லிம்கள் ஆவர். ஸலவாத் ஓதுகின்றவர்கள் ஆவர். இவர்களுக்காகவா ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் சிபாரிசு செய்வதாக அறிவிக்கின்றார்கள்?

இது சிந்திப்பதற்கான தருணமாகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களைச் சேர்ந்தவர்கள் அன்னாரின் உண்மையான தூதுச் செய்தியைப் புரிந்து கொள்பவர்களாகவும் ஆக வேண்டும் என்பதற்காக நாம் துஆ செய்ய வேண்டும். ஸலவாத் ஓத வேண்டும். ஸலவாத்தின் உண்மைத்துவத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். இஸ்லாமிய உலகம் ஆபத்தில் இருக்கின்ற இந்த தருணத்தில் ஒற்றுமையாக இருந்து காட்ட வேண்டும். இதனால் எதிரிகளின் தீய பார்வை முஸ்லிம்களுக்கு இழப்பு ஏற்படுத்தாதிருக்கும்.

ஸலவாத்தில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தாரின் மீது நாம் ஸலவாத் ஓதுகின்றோம். அப்போது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு தொடர்புடைய ஆன்மீக மற்றும் உடல்ரீதியான உறவினர்களையும் நாம் நினைத்துப் பார்க்கிறோம். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரத்த உறவினர்கள் ஆன்மீக உறவையும் நிரூபித்துள்ளார்கள். மேலும் அவர்களது தகுதி மிகவும் உயர்வானதாக உள்ளது. இவர்களைப் பற்றி எந்தவொரு உண்மையான முஸ்லிமுக்கும் தீய எண்ணம் கொள்வதற்கு உள்ளம் அனுமதிக்காது. ஸலவாத் ஓதும்போது அவர்கள் நம் கண்முன் நிற்கிறார்கள். இவ்வாறே

சஹாபாக்கள் உள்ளனர். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும் காப்பாற்ற சஹாபாக்கள் தங்களது உயிரையும் பொருட்படுத்தாது தங்களது நெஞ்சைக் காட்டினார்கள். அந்த சஹாபாக்களில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களோடு குகைக்குள் இருந்த தோழரும் ஒருவர் ஆவார். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அந்த சமயத்தில் **லா தஹ்ஸன் இன்னல்லாஹ மஅனா** – அதாவது கவலையடையாதீர். அல்லாஹ் நம்மோடு இருக்கிறான் என்று கூறியதை இறைவன் திருக்குர்ஆனில் பதித்து, ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்களை ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிரந்தரமான நல்ல நண்பனாக்கி விட்டான். அதுமட்டுமின்றி அந்த ஹிஜ்ரத்தின்போது அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது இறக்கிய அருளுக்கும் வாரிசாக்கி விட்டான். எனவே, இவ்வாறான உயர்ந்த மனிதர்களின் தகுதியை எவ்வகையிலும் குறைக்கும் வண்ணம் எந்தவொரு சொல்லையும் கூறுவது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள்மீது ஸலவாத் ஓதுகின்ற எந்தவொரு முஸ்லிமுக்கும் அழகு அல்ல. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரத்த உறவினர்கள் மட்டுமின்றி ஆன்மீக ரீதியாக தொடர்புள்ளவர்களும் அன்னாரின் குடும்பத்தில் உள்ளனர்.

உலகத்தில் ஒருவருக்கொருவர் எதிராக வெறுப்பின் சுவர் எழுப்பப்படுகின்ற இந்த வேளையில் மேலும் முஸ்லிம் என்று அழைக்கப்பட்டும் வெறுப்பின் விதைகளை விதைக்கின்றனர். இந்த சமயத்தில் இரக்க குணத்துடன் முஹம்மதிய உம்மத்திற்காக துஆ செய்வதும், ஸலவாத் ஓதுவதும் நமது பணியாகும். அல்லாஹ் இவர்களுக்கும் உண்மையான ஸலவாத்தினை புரிந்து கொள்கின்ற நல்வாய்ப்பு வழங்குவானாக. மேலும் இதன் மூலம் முஸ்லிம்கள் **ருஹமாவும் பைனஹும்** என்ற உண்மையான காட்சியைப் பார்க்க வேண்டும். இவர்களுக்காக துஆ செய்வது நமது கடமையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவம் மற்றும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களது குடும்பத்தாருடன் நேசம் கொள்வது தொடர்பாக நமக்கு வழங்கிய ஞானத்தை அன்னாரது சொற்களிலேயே உங்கள் முன் வைக்கிறேன். ஓர் இடத்தில் இவ்வாறு கூறுகிறார்கள்.

ஒருமுறை இவ்வாறு இல்ஹாம் இறங்கியது. அதன் பொருள்: மலக்குகள் மிகவும் ஆவேசத்துடன் காணப்படுகிறார்கள். அதாவது அல்லாஹ்வின் எண்ணம் எழுச்சி பெறுகிறது. அல்லாஹ் தனது மார்க்கத்திற்கு மீண்டும் உயிரூட்ட விரும்புகிறான். எனவே அல்லாஹ் இந்த ஆர்வத்தில் உள்ளான். மலக்குகளுக்கு மார்க்கத்தை உயிர்ப்பிப்பவர் யார் என்று கூறப்படாததால் கருத்து வேறுபாடு கொள்கின்றனர். அதாவது யார் மூலமாக மார்க்கத்திற்கு உயிர் கொடுக்கப்படப்போகிறது என்று அவர்களுக்கு தெரியவில்லை. அப்போது நான் கனவில் கண்டேன். மக்கள் மார்க்கத்திற்கு உயிரூட்டுபவரைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது ஒருவர் இந்த எளியவனை (ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது) முன் வந்து அடையாளம் காட்டி **ஹாஸா ரஜுலுன் யுஹிப்பு ரஸுலல்லாஹ்** – இவர்தான் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிக்கின்ற மனிதர் ஆவார் என்று கூறினார். இந்த இல்ஹாமின் பொருள்: இந்தப் பணிக்கு ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை நேசிப்பதுதான் தலையாய நிபந்தனையாகும். அது இந்த நபரிடம் காணப்படுகிறது. ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தாரின் மீது ஸலவாத் ஓத வேண்டும் என்ற கட்டளை அடங்கிய இல்ஹாம் இதுவாகும்.

**ஸல்லி அலா முஹம்மதின் வஆலி முஹம்மதின் ஸய்யிதே வுல்தே ஆதம் வ காதமன்னபிய்யீன்.**

மேற்கூறப்பட்ட இல்ஹாமில் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது ஸலவாத் ஓத கட்டளையிடப்பட்டுள்ளது. இறைவனின் ஒளியைப் பெற்று பயனடைவதற்கு (அஹ்லே பைத்) ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தார் மீது நேசம் கொள்வது மிகவும் அவசியமாகும் என்ற இரகசியம் இதில் உள்ளது. அல்லாஹ்வின் நெருக்கம் பெற்றவர் தூய்மையானவர்கள் மற்றும் பரிசுத்தமானவர்களின் வாரிசாகிறார்கள். மேலும் அனைத்து நுட்பமான ஞானத்திலும் அவர்களுக்கு வாரிசாகிறார்கள். இவ்விடத்தில் ஒரு மிக ஒளிமயமான கஷ்ஃப் ஒன்று ஞாபகத்தில் வந்தது.

ஒரு முறை மக்ரிப் தொழுகைக்குப் பிறகு நன்றாக விழித்திருந்த தருணத்தில், மெல்லிய மயக்க நிலை வந்தது. அப்போது வியக்கத்தக்க ஒன்று வெளிப்பட்டது. முதலில் திடீர் என்று சில மனிதர்கள் வேகவேகமாக வருவதுபோன்று, நடக்கும் போது காலணிகளின் ஓசை எழுவது கேட்டது. உடனே ஐந்து மிகத் தூய்மையான, அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிக அழகான நபர்கள் வந்தனர். அதாவது ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்), ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் ஹஸன் (ரலி), ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஃபாத்திமத்துஸ் ஸுஹரா (ரலி) ஆவர். அவர்களில் ஒருவர் அனேகமாக ஃபாத்திமா என்று ஞாபகம் வருகிறது. மிகவும் அன்போடும், பாசத்தோடும் ஒரு கருணைமிக்க தாயைப் போன்று இந்த அடியானின் தலையை தங்களது மடியில் வைத்தார்கள். அதற்குப் பிறகு ஒரு புத்தகம் எனக்கு கொடுக்கப்பட்டது. இது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் எழுதிய திருக்குர்ஆன் விளக்கவுரை என்று அது தொடர்பாக எனக்கு கூறப்பட்டது. இப்போது ஹஸ்ரத் அலி (ரலி) அந்த விளக்கவுரையை உமக்கு வழங்குகிறார். ஃபல்ஹம்துலில்லாஹ் அலா ஸாலிக்.

இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கண்ட கஷ்ஃப் காட்சியாகும். இதன் மீதும் சில எதிரிகள் ஆட்சேபனை செய்கிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஃபாத்திமா (ரலி) அவர்களை நவூதுபில்லாஹ் அவமரியாதை செய்துள்ளார்கள் என்று கூறுகிறார்கள். இது இந்த ஆட்சேபனை செய்பவர்களின் தீய இயல்பைக் காட்டுகிறது. குழப்பம் செய்கின்ற மவ்லவிகள் முழுமையாக விஷயங்களைக் கூறுவதில்லை. பொதுமக்கள் அறிவின்மையின் காரணமாக உண்மை விஷயம் என்னவென்று கேட்கவும் விரும்புவதில்லை. மிர்ஸா சாஹிப் தன்னுடைய தலையை ஃபாத்திமா (ரலி) அவர்கள் தமது மடியில் வைத்தார்கள் என்று மட்டும் கூறுகிறார்கள். இவர்களது உள்ளங்களில் மாசு நிறைந்திருக்கிறது. எனவே, அந்த அசுத்தத்திலிருந்து இவர்களால் வெளியேற முடியாது.

ஆனால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மிகவும் அன்போடும், பாசத்தோடும் ஒரு கருணைமிக்க தாயைப் போன்று இந்த அடியானின் தலையை தமது மடியில் வைத்துக் கொண்டார்கள் என்று எழுதியுள்ளார்கள். இங்கு **மாதிரே ஹெர்பான்** என்று எழுதுகிறார்கள். ஒரு கருணை மிகுந்த தாயைப் போன்று என்று எழுதியுள்ளார்கள். ஆக ஒரு கருணை மிகுந்த தாய் என்ற வார்த்தை வந்த பின் இதைப் பற்றி தீய எண்ணம் உள்ளத்தில் வர முடியுமா? தீய எண்ணம் தோன்றுகிறது என்றால் அது தீய உள்ளம், இயல்பு படைத்த மவ்லவிகளின் உள்ளத்தில் தான் உதிக்கிறது.

இந்த முழு கஷ்ஃபிலும் ஒன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உயர் தகுதி விளக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த உயர் தகுதி ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்ட நேசத்தின் காரணமாக அவர்கள் ஓதிய ஸலவாத்தின் காரணமாக கிடைத்தது.

மேலும் கூறுகின்றார்கள்: ஸல்லி அலா முஹம்மதின்.... என்ற இல்ஹாமில் ஒரு இரகசியம் அடங்கியுள்ளது. அதாவது இறைவனின் ஒளியிலிருந்து அருளைப் பெற வேண்டுமென்றால் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய குடும்பத்தாருடன் நேசம் கொள்வது மிகவும் அவசியமாகும். மேலும் அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு அந்த தூய மக்களின் வாரிசாவதும் அவசியமாகும். எனவே அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெறுவதற்கு அந்த தூய மக்களின் காலடிச் சுவட்டைப் பின்பற்றுவது அவசியமாகும். பிறகு அல்லாஹ் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது நேசம் கொள்பவர்களுக்க தனது நெருக்கத்தை வழங்குகிறான். நேசம் கொள்பவரின் பாசத்திற்குரியவர்களுடனும் அன்பு காட்ட வேண்டும். முஸ்லிம்கள் இந்த விஷயத்தைப் புரிந்து கொண்டால் ஒருவருக்கொருவர் வெறுப்பு கொள்ளமாட்டார்கள். வெறுப்பை ஏற்படுத்துபவர்கள் தமது சுயநலத்திற்காகவும், ஆணவத்தின் காரணமாகவுமே வெறுப்பின் சுவர்களை எழுப்புகிறார்கள். இவர்கள் உலமாக்களும், பெயர்தாங்கி மவ்லவிகளும் ஆவர். ஆனால் இந்த வெறுப்பை ஏற்படுத்தி விட்டு மார்க்கச் சான்றோர்களின் பெயரை பயன்படுத்துகிறார்கள். தமது வாழ்நாள் முழுவதும் **ருஹமாவும் பைனஹும்** என்பதற்கு நல்லுதாரணமாகத் திகழ்ந்த அந்த சான்றோர்களின் பெயரால் இவ்வாறு செய்கிறார்கள்.

எனவே, இது பொதுமக்களும் சிந்திக்க வேண்டிய தருணமாகும். கண்மூடித்தனமாக எவரையும் பின்பற்றுவற்குப் பதிலாக உங்களது அறிவைப் பயன்படுத்துங்கள்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் நேசத்தைப் பெறுவதற்கு நமக்கு கற்றுத் தந்துள்ள துஆக்களில் அல்லாஹ்வின் நேசத்தை வேண்டுவதோடு, அல்லாஹ்வின் நேசத்தை மக்கள் மத்தியில் உருவாக்க காரணமாக அமைந்த நல்லடியார்களின் நேசத்தையும் இணைத்து வேண்டியுள்ளார்கள்.

ஒரு துஆவில் நமக்கு இவ்வாறு கற்றுத் தருகிறார்கள்.

**அல்லாஹும் மர்ஸுக்னீ ஹுப்பக வ ஹுப்ப மய்யன் ஃபஉனீ ஹுப்பஹு இன்தக** - அல்லாஹ்வே! எனக்கு உனது நேசத்தையும் வழங்குவாயாக. மேலும் உனது பார்வையில் எனக்கு பயனுள்ள நேசத்திற்குரியவர்களின் நேசத்தையும் வழங்குவாயாக.

மேலும் மிக அதிகமாக பயன்தரக்கூடிய நேசம் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொள்கிற நேசமாகும். இந்த நேசம் அல்லாஹ்வின் அருகாமையைப் பெற்றுத் தரும். எனவே, நிச்சயமாக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அன்பிற்குரியவர்களின் மீது நேசம் கொள்வது அல்லாஹ்வின் அருகாமையைப் பெற்றுத் தரும்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் எல்லா கட்டளைகளையும் எல்லா செயல்களையும் பின்பற்றுவது தான் நமது கடமையாகும். மேலும் அன்னார் நேசம் கொண்டவர்கள் மீது நேசம் கொள்வதும் நமது பணியாகும். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தங்களது உடல்ரீதியான மற்றும் ஆன்மீக ரீதியான குடும்பத்தாருடன் அதாவது இரத்த பந்தங்கள், ஆன்மீக ரீதியிலும் ரஸுலுல்லாஹ்வோடு தொடர்பு கொண்டுள்ளார்கள். அவர்களையும் நேசித்தார்கள். மேலும் ஆன்மீக சந்ததிகளாகிய அன்னாரை ஏற்றுக்கொண்ட மக்களையும் நேசித்தார்கள். இந்த நேசத்தின் வெளிப்பாடு இந்த உம்மத்தில் உம்மீது ஸலவாத் ஓதுகின்றவர்கள் மீது அல்லாஹ் கருணை காட்டுவான் என்று கூறியபோது வெளிப்பட்ட மகிழ்ச்சியின் மூலம் தெரிய வருகிறது. அந்த காலத்தில் இருந்த சஹாபாக்களுக்கு மட்டும் அல்ல. கியாமத் வரையுள்ள இந்த உம்மத்தைச் சேர்ந்த ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் ஓதுகின்ற மக்கள் மீது அல்லாஹ் கருணை காட்ட உள்ளான் என்பதைக் கேட்டு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எல்லையில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. எனவே உண்மையான நேசம் இருக்கும்போதுதான் தான் உண்மையான மகிழ்ச்சியும் ஏற்படும். முஸ்லிம்கள் இந்த அடிப்படையைப் புரிந்து கொண்டால் ஒருபோதும் பிற பள்ளிவாசல்களில் தற்கொலைத் தாக்குதல்கள் நடக்காது. உலமாக்கள் மீது குறிப்பாக முஹர்ரம் மாதத்தில் சில இடங்களுக்கு செல்வது தடைவிதிக்கப்படமாட்டாது.

எவ்வாறு இருந்தபோதிலும், இவர்களின் நன்மைக்காக துஆ செய்து கொண்டிருப்பது நமது பணியாகும். இதற்கெல்லாம் என்ன காரணம்? என்று முஸ்லிம்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஒரு காலத்தில் ஒருவருக்கொருவர் சகோதர மனப்பான்மையோடும், நேசத்தோடும் வாழ்ந்த காட்சிகள் தென்பட்டன. ஆனால், இன்று பல்வேறு பிரிவுகளின் மத்தியில் எதிர்ப்பின் எரிமலை பொங்கிக் கொண்டிருக்கிறது. இந்த உம்மத்தின் மீது எவருடைய கண் பட்டு விட்டது? எங்கு வரம்பு மீறி விட்டோம்? அதற்கான தண்டனை இப்போது நமக்குக் கிடைத்துக் கொண்டிருப்பதற்கு இஸ்லாத்தின் உண்மையான அழகை உலகிற்குக் காட்டவே நன்றாக சிந்தியுங்கள். நன்றாக சிந்தியுங்கள். உங்கள் பலவீனத்தின் பக்கம் பாருங்கள்.

அஹ்மதிகளாகிய நாம் இந்த மாதத்தில் அதிகமாக ஸலவாத் ஓதுங்கள். முஸ்லிம் உம்மத் ஒருவருக்கொருவர் கொண்டிருக்கும் பகைமையையும் விட்டு விலகி குழப்பம், சீரழிவு நீங்கி பாதுகாப்புப் பெறுவதற்காகவும் அதிகம் துஆ செய்யுங்கள். மேலும் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் குடும்பத்தார், சஹாபாக்கள் மற்றும் நமது அன்பிற்குரிய தலைவர் (ஸல்) அவர்களின் அன்பிற்குரியவர்களிடம் அளவற்ற அன்பைக் காட்டுங்கள். ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் இரத்த உறவுகள் அன்னாரோடு

ஆன்மீக உறவும் வைத்திருந்தார்கள். அவர்கள் நமது நேசத்திற்கு நிச்சயம் உரிமை உடையவர்கள் ஆவர். முதல் உரிமை உடையவர்கள் ஆவர்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ஹுஸைன் (ரலி) அவர்களைப் பற்றி கூறுகிறார்கள்:**

ஹுஸைன் (ரலி) அவர்கள் தூய்மையாளர் ஆவார்கள். மேலும் அல்லாஹ் தன் கரங்களால் தூய்மையாக்கி தன் நேசத்தைப் பொழிகின்ற நல்லடியார்களுள் ஒருவர் ஆவார். மேலும் சந்தேகமின்றி சொர்க்கத்தின் தலைவர்களுள் ஒருவர் ஆவார். மேலும் அவருடன் சிறிய அளவு காழ்ப்புணர்ச்சி கொள்வதுகூட ஈமானை அழித்து விடும். இந்த இமாமின் இறையச்சமும், இறை நேசமும், பொறுமையும், ஈமானில் நிலைநிற்றலும், பணிவும், இறைவணக்கமும் நமக்கு முன்மாதிரியாகும். அவருக்கு எதிரியாகின்ற உள்ளம் நாசமடைந்து விட்டது. செயல்ரீதியில் இவரோடு அன்பு காட்டுகின்ற உள்ளம் வெற்றியடைந்து விட்டது. எனவே, இமாம் ஹுஸைனுடன் ஒவ்வொரு அஹ்மதியும் காட்ட வேண்டிய அன்பும், நேசமும் இவ்வாறு இருக்க வேண்டும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இதை நமக்கு போதித்துள்ளார்கள்.

இவ்வாறே சஹாபா (ரலி) அவர்கள் அன்பும் நமது உள்ளத்தில் நிலைத்துள்ளது. இது தொடர்பாகவும் ஹஸ்ரத் மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு கூறியுள்ளார்கள். ஹஸ்ரத் அபூபக்கர், ஹஸ்ரத் உஸ்மான், ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அன்பும் நமது உள்ளத்தில் நிலைத்துள்ளது. ஒரு பக்கம் நேசம் இருந்து மறுபக்கம் நேசம் குறைந்து காணப்படுவதில்லை. அல்லாஹ் மற்றும் அவனது ரஸுல் (ஸல்) அவர்களின் மீது நேசம் கொள்கிறவர்கள் மீதும் நாம் நேசம் காட்ட வேண்டும்.

சஹாபாக்களின் உயர் தகுதியை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள். சஹாபா பெருமக்கள் அல்லாஹ் மற்றும் அவனது ரஸுலின் வழியில் காட்டிய உண்மை (சித்க்) –ன் காரணமாக **ரலியல்லாஹு அன்ஹும் வரலூ அன்ஹு** என்ற குரல் கேட்டது. இது மிகவும் உயர்வான பதவியாகும். அதாவது அல்லாஹ் அவர்களிடம் திருப்தி கொண்டான். அவர்களும் அல்லாஹ்வோடு திருப்தி கொண்டார்கள்.

**ஹஸ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:**

அவர் [(அபூபக்கர் ஸித்தீக் (ரலி)] இஸ்லாத்தின் இரண்டாவது ஆதம் மற்றும் தலைசிறந்த படைப்பினத்தின் முதல் தோற்றம் ஆவார். அவர் நபி அல்ல. ஆனால், அவரில் நபி மற்றும் ரஸுலின் தகுதிகள் யாவும் இருந்தன. அதாவது அன்னார் ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நிழலாக இருந்தார்கள். அன்னாரை முழுமையாகப் பின்பற்றினார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பற்றி கூறுகிறார்கள்:**

ஷய்த்தான் உமர் (ரலி) அவர்களின் நிழலைக் கண்டு ஓடுகிறான் என்ற ஹதீஸ் உமர் (ரலி) அவர்களைப் பற்றியதாகும்.

இரண்டாவது ஹதீஸ் இதுவாகும்.

அதாவது எனக்குப் பின் நபி இருந்தால் அது உமராக (ரலி) இருப்பார்.

மூன்றாவது ஹதீஸ் இதுவாகும். முந்தைய சமுதாயத்தில் **முஹத்தஸ்** இருந்து வந்தார்கள். (அதாவது அல்லாஹ்வோடு உரையாடுவார்கள்.) எனது உம்மத்தில் **முஹத்தஸ்** இருக்கின்றார் என்றால் அது உமர் ஆவார். எனவே, நமக்கு ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் அன்பிற்குரியவர்கள். எல்லாரும் அன்பிற்குரியவர்கள் ஆவர்.

அல்லாஹ் முஸ்லிம் உம்மத்திற்கு அனைத்து விதமான பிரிவினையையும் முறிப்பதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. இன்றைய காலத்தில் வெளிப்புறம் இருந்தும் எதிர்ப்பு வலுவடைந்துள்ளது. இன்று நாம் ஒன்றுபட்டு அல்லாஹ்வின் முன்னிலையில் குனிய வேண்டும்.

இன்றைய நாட்களில் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு மத்தியில் போர் நடந்து வருகிறது. இதிலும் சரியான வழிகாட்டல் இல்லாமல் பாலஸ்தீன அநீதியிழைக்கப்பட்ட மக்கள் இழப்பிற்கு ஆளாகின்றனர். இவர்கள் தமக்குத்தாமே இழப்பை ஏற்படுத்திக் கொள்கின்றனர். மேலும் இக்காலகட்டத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மார்க்கத்தின் பெயரில் போர் புரியாதீர்கள் என்று கூறி வழிகாட்டி விட்டார்கள். மார்க்கத்தின் பெயரில் இப்போது புரியப்படுகின்ற போர் வெற்றி பெறாது. இந்த போரில் எந்த நீதியும் இல்லை. சமூக பேச்சுவார்த்தை மூலம் நிலைமையை முடிவுக்கு கொண்டுவருவதுதான் புத்திசாலித்தனமாகும். அப்போதுதான் அப்பாவி உயிர்கள் கொல்லப்படுவதை தடுக்க முடியும். இஸ்ராயீலின் தாக்குதல் அப்பாவிகளின் மீது நடக்கிறது. அவர்களது இலக்கினைத்தான் அடிக்கிறார்கள். ஆனால் அப்பாவி உயிர்கள் கொல்லப்படுகின்றன. நீங்கள் ஒன்றுக்குப் பதிலாக 150 உயிர்களை கொன்று விடுகிறீர்கள் என்று இங்குள்ள (இலண்டன்) செய்தித்தாள்கள்கூட செய்தி வெளியிட்டன. அல்லாஹ் அவர்களுக்கு கொண்டு வருகின்ற முடிவு போரினால் அல்ல. எவ்வாறு முடிவு ஏற்பட வேண்டும் என்று அல்லாஹ் நன்கு அறிவான். அவனது விதி செயல்படும். திருக்குர்ஆனிலிருந்து இதுவே நமக்கு புரிகிறது. எனவே பாலஸ்தீன மக்கள் தம்மை தற்காத்துக் கொள்ள வேண்டுமென்றால் அதில் முஸ்லிம்களுக்கு உதவி இருக்கிறது என்றால் அல்லாஹ்வின் முன் குனிந்தவாறு இருங்கள். துஆவின் மூலம் அல்லாஹ்வின் உதவியை வேண்டுங்கள். அல்லாஹ் அநீதியிழைப்பவர்களை நிச்சயம் பிடிப்பான். முஸ்லிம்களும் காலத்தின் இமாமின் குரலுக்கு செவிமடுக்க வேண்டும். நீங்கள் நீதியின் தேடல்களை பூர்த்தி செய்யவில்லையென்றால் போரில் வீழ்ந்து கொண்டே இருப்பீர்கள் என்று எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கூறுகிறேன். அப்பாவி உயிர்களை அநியாயமாக கொன்று விட்டு நீங்கள் தப்பித்துக் கொள்ளமாட்டீர்கள். நீங்கள் உங்களது சந்ததிகளை இந்த அழிவிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள். நீதியை நிலைநாட்டுங்கள்.

இந்த பெரும் சக்திகள் நீதியை நிலைநாட்டுபவர்களாக ஆக வேண்டும். இதற்கு அல்லாஹ் வகை செய்வானாக! இல்லையென்றால், இது இரண்டு நாடுகளுக்கு மத்தியில் மட்டும் நடக்கின்ற போராக இது இருக்காது. மாறாக, இந்த போர்கள் முழு உலகிலும் மாபெரும் அழிவை ஏற்படுத்தும். அல்லாஹ் அஹ்மதிகளாகிய நமக்கு துஆ மற்றும் ஸலவாத் ஓதுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக! இதன் மூலம் உலகை இந்த பேரழிவிலிருந்து காப்பாற்றுபவர்களாக நாம் திகழ அல்லாஹ் அருள்புரிவானாக! உலகம் இந்த உண்மையைப் புரிந்து கொண்டு அழிவிலிருந்து பாதுகாப்புப் பெற அல்லாஹ் உதவுவானாக! அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த புதிய வருடம் ஆயிரக்கணக்கான அருள் மற்றும் கருணையைப் பெற்று விளங்க வேண்டும். மேலும் நாம் அல்லாஹ்வின் அருளால் புதிய புதிய வெற்றிகளை காண்பவர்களாக விளங்க வேண்டும். இந்த புத்தாண்டை அல்லாஹ் ஒவ்வொரு அஹ்மதிக்கும் அருளுக்குரியதாக ஆக்குவானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KUTHBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 02.01.2009**

Translated by : **Maulavi S. ABDUL QADIR Sb.**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**